**2023 ஒகத்து**

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

## தயாரித்தல் மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2023 ஒகத்தில் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலையும் தயாரித்தல் நடவடிக்கைகளின் சுருக்கம் மெதுவடைதலையும் எடுத்துக்காட்டின.


**தயாரிப்பு கொ.மு.சு 49.3**

**2023 ஒகத்து**

**தயாரிப்புக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2023 ஒகத்தில் 49.3 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, நடுநிலையான அடிப்படை அளவை அண்மித்துச் சென்று முன்னைய மாதங்களுடன் ஒப்பிடுகையில் தயாரித்தல் நடவடிக்கைகளில் மீட்சிக்கான சமிக்ஞைகளை எடுத்துக்காட்டியது.** துணைச் சுட்டெண்களைக் கருத்திற்கொள்கையில், புதிய கட்டளைகள் மற்றும் நிரம்பலர் விநியோக நேரம் என்பன மாதகாலப்பகுதியில் அதிகரித்த அதேவேளை உற்பத்தி மற்றும் தொழில் நிலை ஆகியன சுருக்கமடைந்தே காணப்பட்டன.

புதிய கட்டளைகளில் ஒட்டுமொத்த அதிகரிப்பானது சில்லறை விலைகளில் தொடர்ச்சியான கீழ்நோக்கிய திருத்தங்களுக்கு பதிலிறுத்தி உணவு மற்றும் குடிபானத் துறை மூலம் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. மாதகாலப்பகுதியில் தமது ஒட்டுமொத்த தொழில் நடவடிக்கைகளில் மேல்நோக்கிய போக்கு காணப்பட்டதாக உணவு மற்றும் குடிபானத் துறை தயாரித்தல் துறையைச் சேர்ந்த அநேகமான பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். அதேவேளை, உற்பத்தியில் தொடர்ச்சியான பின்னடைவானது இடம்பெறுகின்ற குறைவடைந்த உலகளாவிய கேள்வியின் காரணமாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் தயாரிப்புத் துறையினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. மேலும், தொழில்நிலையானது ஒகத்திலும் சுருங்கிக் காணப்பட்ட அதேவேளை கொள்வனவுகளின் இருப்பு மாதத்திற்கு மாதம் அடிப்படையில் மாற்றமின்றிக் காணப்பட்டது. அதேவேளை, நிரம்பல் விநியோகநேரம், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் ஒகத்தில் நீட்சியடைந்தது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | யூலை | ஒகத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **44.6** | **49.3** | **+** | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள் | | | | |
| புதிய கட்டளைகள் | 47.5 | 53.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| உற்பத்தி | 41.9 | 48.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 41.9 | 43.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 47.0 | 50.0 | + | வீழ்ச்சியிலிருந்து நடுநிலை |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 45.5 | 51.0 | + | குறுக்கத்திலிருந்து நீட்சியடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், குறிப்பாக தளர்த்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள், கடன்பெறுதல் வீதங்களில் வீழ்ச்சி மற்றும் மூலப்பொருள் விலைகளில் குறைவு என்பன காரணமாக மேம்பாட்டினை எடுத்துக்காட்டின.

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் பெறுமதி யூலையிலிருந்து 0.4 புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2023 ஒகத்தில் 49.0 கொண்ட பெறுமதியினைப் பதிவுசெய்தது.

சீனா, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு. 2023 ஒகத்தில் உயர்வான வேகத்தில் மேம்பட்டது. எனினும், யூரோவலயம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் தயாரிப்பு முகாமையாளர் சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஒகத்தில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 செத்தெம்பர் 14 அன்று உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் உலக முழுவதும் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கொ.மு. சுட்டெண்களைத் தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.ச 57.6**

**2023 ஓகத்து**

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2023 ஓகத்தில் 57.6 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து பணிகள் நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவடைதலை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் இதற்கு முன்னிலை வகித்திருந்தன. எவ்வாறிருப்பினும், தொழில்நிலை மாதகாலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்ட அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் சுருக்கமடைந்து காணப்பட்டன.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, நிதியியல் பணிகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், ஏனைய தனிப்பட்ட பணிகள், தொழில்சார் பணிகள் மற்றும் கல்வி ஆகிய துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் 2023 யூலையுடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் அதிகரித்தன.

தொழில் நடவடிக்கைகள் 2023 ஓகத்தில் தொடர்ந்தும் விரிவடைந்து பல்வேறு துணைத் துறைகளில் சாதகமான அபிவிருத்திகளைக் காண்பித்தன. அதற்கமைய, அதிகரித்த சுற்றுலாப்பயணி வருகைகளுக்கு பாரியளவு சாட்டத்தக்க தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் அத்துடன் ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் துணைத் துறைகள் மாதகாலப்பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. மேலும், இவ்வளர்ச்சியினை தூண்டுவதில் உள்நாட்டு சுற்றுலா துறையில் மேம்பாடுகளும் முக்கிய வகிபாகத்தை ஆற்றின. அதேவேளை, குறைவான சந்தை வட்டி வீதங்களின் பின்னணியில் கொடுகடன் கேள்வியில் அதிகரிப்பினால் தூண்டப்பட்டு நிதியியல் பணிகள் துணைத் துறையும் மாதகாலப்பகுதியில் மேலும் மேம்பாடுகளைக் காண்பித்தன.


தொழில்நிலை முன்னைய மாதத்தில் பதிவாகிய அதிகரிப்பினைத் தொடர்ந்துசென்று அதே மட்டத்தில் காணப்பட்டது. நிலுவையிலுள்ள பணிகள் மாதகாலப்பகுதியில் குறைவான வேகமாயினும் வீழ்ச்சியடைந்தன.

| மாறி | யூலை | ஓகத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.ச** | **59.5** | **57.6** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | கொ.மு.ச துணைச் சுட்டெண்கள் | | | |
| புதிய வியாபாரங்கள் | 62.0 | 62.4 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 67.5 | 58.9 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.0 | 50.0 | - | அதிகரிப்பிலிருந்து நடுநிலை |
| நிலுவையிலுள்ள பணி | 45.1 | 47.3 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 71.7 | 69.4 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், தளர்த்தப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் மேம்பட்ட கேள்வியினால் முன்னிலை வகித்து எதிர்பார்க்கப்பட்ட மேம்படுத்தல் காரணமாக ஓகத்தில் மெதுவான வேகத்தில் தொடர்ந்தும் அதிகரித்தது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.ச***

உலகளாவிய பணிகள் கொ.மு.ச, 2023 ஓகத்தில் 51.1 ஐப் பதிவுசெய்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்தியது.

சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஓகத்தில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை ஐக்கிய இராச்சியத்தின் பணிகள் கொ.மு.ச அந்நாட்டின் பணிகள் நடவடிக்கைகளில் சீர்குலைவினை எடுத்துக்காட்டியது..

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[I], 2023 செத்தெம்பர் 14 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.ச=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.ச >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.ச <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.